

# காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 வைகாசி 19 (2-6-74) | இதழ்: 46

★

உள்ளே......

படமும் பாடமும் (2)
(அறிஞர் அண்ணா)

★

கலைஞர் வாழ்க!
(தலையங்கம்)

★

புரட்சிக் கவிஞரின்
புரட்சிக் கருத்துக்கள்
(கட்டுரை)

★

இடைவெளி
(சிறுகதை)

★

விலை: 0-25 காசு



கருணை ஆழி — கலைஞர் வாழி!

# புரட்சிக் கவிஞரின் புரட்சிக் கருத்துக்கள்

இரா. மணி

"பாரிச வாயுவும் பக்கவாதமும் போட்ட லேக்கும் இன்றைய கவிதையுலகிலே இவருடைய பாட்டுத்தான் நிமிர்ந்து நிற்கின்றது" என்று புதுமைப்பித்தன், பாரதிதாசன் கவிதைகள் எத்தன்மையன என்பதைப் படம் பிடித்துக்காட்டி விடுகிறார். "வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சி பெறவும், விசை ஒடிந்த தேகம் வன்மை பெறவும், சூழ்ச்சி, வஞ்சகம், பொறாமைகளை எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும் திண்மை பெற வும், கடல் போலச் செந்தமிழைப் பெருக்க வும், மீண்டும் மதங்கள் அண்டா நெருப்பாக வும், அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக் காகவும், "பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஓர் உண்மையான கவி இருக்கிறார்" (கு. ப. ரா) என்று எல்லாரும் போற்ற, "உலகெங்கும் உள்ள நவயுகக் கவிஞர்களிலே பாரதிதாசனும் ஒருவர்" (தி. ஜ. ர.) என்று ஏற்றுப் போற்றுகின்றார் என்றால் அதற்குக் காரணம் என்ன? அவர்தம் கருத்துக்கள் தமிழை—தமிழனைத்-தமிழகத்தைப் பலபடி கள் முன்னேறச் செய்து கொண்டு இருப்ப தால் தானே!"

மதத் தலைவர்களின் தூண்டுதல்கள் மூலம், நாட்டில் நடந்துகொண்டிருக்கின்ற கொடுமைகளைக் கண்ட கவிஞர், அந்த உலுத்தர்களை வேட்டு வைத்துத் தகர்க்க, பகுத்தறிவுக் கருத்துகளால் மட்டுமேதான் முடியுமென்பது அறிந்து அதற்காக,

"இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே!
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்."

என்று உறங்கும் மக்களை எழுப்பி சிந்திக்கச் செய்கிறார்.

இந்திமொழி இந்தியாவின் பொது மொழியாகத் திணிக்க நடுவணரசும், மாநில அரசும் முற்பட்ட நேரங்களில் எல்லாம், அவர் சார்ந்திருந்த இயக்கமும், அவரும் வன்மையாக எதிர்த்தனர். இந்தியானது இந்நாட்டுப் பொதுமொழியாகத் திணிக்கப் பட்டால், தமிழர்கள் இரண்டாம் தரக் குடிமக்கள் ஆச்சப்படுவார்கள் என்பதையும், நாட்டில் என்னென்ன விளைவுகள் விளையும் என்பதையும் தனது கனல் பறக்கும் நடையில்,

"தமிழனும் தமிழும் தணலும் சூடும்
அமிழ்தமே ஆயினும் அயலமொழி அயல்மொழி
அயல்மொழி தமிழை அண்டும் விழுக்காடு
தமிழ்மொழி தாழும்; தமிழன் தாழ்வான்!
தமிழை வடமொழி தாவும் நோக்கம்
தமிழை அழிப்பதும், தான்மேம் படுவதும்
வடமொழி அதனின் வழிமொழி எதுவும்
தமிழ்மேல் சந்தனம் தடவவே வரினும்
அழித்து மறுவேலை உன்னுதல்வேண்டும்."

என்கிறார்.

"பாரதிதாசன் கவிதையில் வேகம் உண்டு; விடுதலைத் தாகம் உண்டு; பண்பும் உண்டு; பயனும் உண்டு" (சேதுப்பிள்ளை)

புதியதோர் உலகு செய்வோம் என்ற புரட்சிக் குரல் உலகத்தில் எதிரொலித்த நேரத்தில், அந்தப் புதிய உலகத்தில் சாதிமத பேதங்கள், மூடப்பழக்க வழக்கங்கள் அகன்ற முற்றிலும் புதிய உலகமாக அது இருக்க வேண்டுமென்று இளைஞர்கட்கு,

"சாதிமத பேதங்கள் மூடவழக் கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டையுல கிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப் போம்; பின்னர்
ஒழித்திடுவோம்;—புதிதான ஒருலகம் செய்வோம்."

என்று கட்டளை இடுகின்றார்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

# கலைஞர் வாழ்க!

இந்தத் திங்கள் 3-ஆம் நாள், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு 51-வது அகவை தொடங்குகிறது.

"தம்பி கருணாநிதி தமிழகத்திலே இன்று ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியின் தூதுவர் குழுவிலே முக்கியமானவர்......கருணாநிதியின் திறமை, வளர்ந்து வரும் மறுமலர்ச்சியின் நன் மலர்! தமிழகம் இத்தகைய திறமை மிக்கவரைப் போற்றி வளர்க்க வேண்டும்!" என்றுபேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்டவர்—டாக்டர் கலைஞர் ஆவார்.

1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்களால் அமைக்கப்பட்ட கழக அரசை அவரால் போற்றி வளர்க்கப்பட்ட திருவாரூர் பெற்றதீரர்—இந்தியாவிலேயே இணையற்ற முதல்வர்—கலைஞர் அவர்கள் கண்ணியத்தோடு நடத்தி வருவதுடன், தமிழகத்தை பசும் சோலையாக்கி வருகிறார்.

பசுமை புரட்சித் திட்டத்தின் கீழ் உற்பத்தியில் தன்னிறைவு—ஐந்தாண்டுகளில் எல்லாப் பேருந்து வழித் தடங்களையும் நாட்டுடைமை ஆக்கல்—உழுபவருக்கு நிலம் சொந்தம்—தொழிலாளருக்குத் தொழிலில் பங்கு—பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்க இளைஞர் அணி—அரசு நடவடிக்கை முதற்கொண்டு ஆலய வழிபாடுவரை எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றநிலை—மனுநீதித் திட்டம்—குடிசை மாற்றுவாரியத்தின் சாதனைகள் இவை அனைத்தும் முதல்வர் அவர்களின் இதயத்திலிருந்து வெளிவந்த எழுச்சிமிகு திட்டங்களாகும். அண்ணனின் இறுதி உயிலாம் சுயாட்சிச் சுடரை அணையாமல் பாதுகாக்கும் ஆற்றல் மறவர் கலைஞராவார்.

அறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிய கழகத்தை குடும்ப பாசத்துடன் கட்டிக்காத்து வரும் செயல் வீரர் நம் கழகத்தலைவர் கலைஞரே ஆவார். அவர் ஒவ்வொரு வருடமும் தமது பிறந்தநாள் பரிசாக ஏழை எளிய மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து வருகிறார். 1971-ம் ஆண்டில் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்—1972-ம் ஆண்டில் கண்ணொளி வழங்கும் திட்டம், 1973-ம் ஆண்டில் கைரிக்‌ஷா ஒழிப்புத் திட்டம் என்று தொடங்கிய இத்திட்ட அடிப்படையில் இந்த ஆண்டு தனது 51-வது பிறந்தநாள் பரிசாக ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் 12 அம்ச புரட்சித் திட்டங்களை அறிவித்துள்ளார்.

இவ்வாறு திட்டங்களை தீட்டி திறமையுடன் நிறைவேற்றி சமுதாய மறுமலர்ச்சியில் தனது முத்திரையைப் பொறித்துள்ளார்.

அவருடைய இலட்சியப் பயணம் தொடர வேண்டும்.

அண்ணா வழிநின்று அயராது உழைக்கின்ற—எங்கள் தானைத்தலைவனே; தமிழ் சமூகத்தின் உயிர்துடிப்பே வாழ்கநீ பல்லாண்டு—வெல்க நமது இலட்சியம்.

—கே. எஸ். ராசன்.

★★★★★★★★★★★★★★★★★★★★

# கலைவாழ்நிதி வாழ்க!

## (கவிஞர் மணிவேந்தன்)

கல்லக்குடி பெயருக்கெனக்
களத்தில்பகை எதிர்த்தாய்
வெல்லத்தமிழ் மொழிகாத்திடத்
தனிமைச்சிறை இருந்தாய்
சொல்லும்தமிழ் செயலும்தமிழ்
எனவேதமிழ் வளர்த்தாய்!
கல்லின்திறம் கவியில்தரும்
கருணாநிதி வாழ்க!

நிதியாய்த்தமிழ் நிதியாய் உரைக்
கவியேதரும் நிதியே!
நதியாய்க்கலை நதியாய்க்கதை
நயமாய்த்தரும் நிதியே!
மதியோய்எமை மதியாய்இலை
மணியாம்நிதி வாழ்க!
கதியாய்க்குறள் கதியாய்த்தொழும்
கருணாநிதி வாழ்க!

புவிமீதினில் முதல்வர்ப்பணி
புரியும்புலி வாழ்க!
செவியேநிறை உரைதான்தரு
'துரை'யின்உரு வாழ்க!
தவித்தேங்கிடும் தமிழ்த்தாய்மகிழ்
தலையாம்நிதி வாழ்க!
கவிமாநிதி கலைவாழ்நிதி
கருணாநிதி வாழ்க!!

தினமாம்ஒலி தமிழாம்ஒலி
முரசாம்ஒலி வாழ்க!
மனமாம்ஒலி மகிழ்வாம்ஒலி
மறவன்ஒலி வாழ்க!
சினம்போம்படி குணம்ஆம்படி
பழகும்நிதி வாழ்க!
கனியாம்தமிழ் நடையால்எமை
கவரும்நிதி வாழ்க!!

உதயம்செயும் சுயாட்சிச்சுடர்
ஒளியில்இருள் ஓட
இதயம்நிறை தலைவன்புகழ்
இணையில்புகழ் ஓங்க
இதயங்களி கொளும்நல்விழா
எழில்பொன்விழா நாளில்
அதிகாரமும் அதிகம்பெற
சபதம்எடுப் போம்நாம்!!

★★★★★★★★★★★★★★★★★★★★

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

மதங்களானவை அறிவியல் உண்மைகளை ஏற்க விடாமல் எது நல்லது? எது தீயது என்ற பகுத்தறிவுத் திறன் வளர்க்க விரும்பாமல், செயல்படாமல் மூடப்பழக்க வழக்கங்களையும், அது என்னென்ன தீமைகளை நாட்டில் தூவியுள்ளது, அதன் செயல் எத்தன்மையது என்பதையும்

'மதம் என்ற கருங்கற் பாங்கில்
மல்லிகை பூப்ப தில்லை!
மதியினில் மயக்கம் என்ற
நஞ்சொன்றே மலரும்! நாட்டில்
புதியதோர் பொல்லாங் கென்னும்
எரிமலை புகையும்; மக்கள்
இதுநலம் இதுதீ தென்னும்
எண்ணமும் இழந்துபோவார்''

என்று கூறி ஆர்த்தெழுகின்றார்,

"பெருக்கெடுத்தோடும் மலையருவியின் வேகம், மின்னலின் விரைந்து தாக்கும் கூர்மை, உண்டதும் உயிர்ப்பிக்கும் உயிர்ப் பண்பு, பனி நீரின் தூய்மை. கொம்புத் தேனின் இனிமை, மயக்கும் மலர் மணம், தாழா நகைச்சுவை; இவற்றின் இன்பச் சேர்க்கையே புரட்சிக்கவி பாரதிதாசனின் கவிதைகள்'' (சுந்தரவடிவேலு) என்பதற்கு மூலகாரணங்கள் பல. அவற்றில் ஒரு கருத்தாக, பிறந்த ஆண் குழந்தைக்குத் தாலாட்டு இசைக்க முற்படும் கவிஞர், நாட்டிலே பரவிச் சமுதாயத்தை நலிவு செய்து வரும் மூடப்பழக்கங்களின் நிலை வெழ, அவைகளை இந்தக் குழந்தையாவது எதிர்காலத்தில் ஒழிக்குமெனக் கருதி,

''வாடப் பலபுரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப் பழக்கத்தைத் தீதென்றால்
முட்டவரும்
மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்ட
வந்த
ஈடற்ற தோளா இளந்தோளா
கண்ணுறங்கு',

என்ற வருத்தம் தொனிக்கப் பாடுகிறார்.

''பாரதிதாசனின் தமிழ்ப் பற்றுக்கு எல்லையில்லை; அவர்தம் பாடல்களைப் படிக்கிற அந்நியனும் தமிழனாகி விடுவான்'' (அ. சிதம்பரநாதன்) என்று பாராட்டுப் பெற்றிடக் காரணம், தமிழ் எந்த அளவுக்குச் சிறந்தது என்பதைக் கவிஞர் உயிர் மூச்சோடு அதை இணைத்துக்காட்டி, மூச்சு இல்லையேல் உயிரில்லை; அதேபோலத் தமிழுணர்வு இல்லையேல் இந்த உடல் இருந்தாலும், உயிரில்லாததற்கே சமம் என்பதாகக் கருதி.

''நம்நாடு தமிழ்நாடு நாமெல்லாம்
தமிழ்மக்கள் இன்பம் கோரி
இந்நிலத்தில் வாழ்வதெனில் மூச்சாலே
அம்மூச்சுத் தமிழே! அந்தப்
பொன்னான தமிழாலே தமிழ்ச்சான்றோர்
புகன்றதமிழ்ச் சட்டம் ஒன்றே
இந்நாட்டை ஆண்டிடுதல் வேண்டுமதை
இகழ்வானை ஒழிக்கவேண்டும்.''

என்று வற்புறுத்துகிறார்.

''ஒரு சமயக் கடை வீதியின் அப்பால்
ஒரு சோதி அறிவிற் சரிநீதி விளங்கும்
அதைக் காதினில் தினம் கேட்க''
முயலுபவர்

பாரதிதாசன். இத்தகைய முயற்சியிலே சில உருவெளிகள் காணப்படுவது இயல்பு. அவைகளைக் கண்டு நாம் மிரள வேண்டிய தில்லை. கொள்கைகளை மீறி ஒளிவீசும் அவருடைய கருத்துக்களை நாம் அறிய வேண்டும். அந்தக் கருத்துக்களின் மூல உணர்ச்சிகளை நாம் உணரவேண்டும் '(தி. ஜ. ர) என்றவர் குறிப்பிடக் காரணம், நாட்டிலே எங்கும் சமத்துவ முழக்கம் கேட்கப்படுகின்ற நேரத்தில், சிலருடைய வயிறுகள் 'செரிப்பின்மை'யால் அவதியுறுவதா? பலகோடி வயிறுகள் உணவின்மையால் துன்பப்படுவதா? இதற்கெல்லாம் தீர்வுதான் என்ன?


''ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதயப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பாநீ!''

என்று, ''ஏழைகளே! நம்மால் என்ன செய்யமுடியுமென்று கைகளைக் கட்டிக் கொண்டு உட்காரதீர்கள்; எழுங்கள் உதை கொடுத்தால் அனைத்தும் உங்கள் கையில் என்ற நிலை வந்தே தீரும்'' என்று பாமரர்க்கு வீர அறிவுரை தருகிறார்.

''பாரதிதாசன் நன்றாகக் கவிபாடுகிறார்; ஆனால் அவர் பிராமணத்துவேசி என்று சிலர் கூறுகிறார்கள். பாரதிதாசன் பிராமணத்துவேசி மட்டுமல்ல; மதத்தின் புரா

13-ஆம் பக்கம் பார்க்க

# தம்பிக்கு மடல்



## தம்பி !

தம்பி! இதே கோவிந்தவாடி, எனக்கு 'ஓட்' அளிக்காமல் இருந்து விடவில்லை; நிறைய அளித்தார்கள்; ஆதரவு கிடைத்தது.

தேர்தல் காரியத்திலே ஈடுபாடு கொண்டு, நாம் சுவையும் சுறுசுறுப்பும் வழியும் வகையும் பெறவில்லை.

பொதுவாகவே ஒரு தேர்தலுக்குத் தேவையான அளவு வசதி இல்லை' அத்துடன் இந்தக் குறை வேறு! இந்த நிலையில் நமக்குப் பதினறு இலட்சத்துக்குமேல் 'ஓட்டு'கள் கிடைத்தன என்பதிலேதான், வியப்பு இருக்கிறது!

நாமக்கல் அடுத்த சிற்றூர் ஒன்றிலே, மாலை சுமார் ஐந்து மணிக்கு, நான் பேசிக் கொண்டிருக்கிறேன்' 'ஏழாம் தேதி! திடீரென்று, நண்பர் சித்கய்யன், என் கரத்திலிருந்த 'மைக்'கை வெடுக்கெனப் பறித்துக் கொண்டு,

ஒரு சந்தோஷமான செய்தி
ஒரு மகிழ்ச்சியான செய்தி
நம்ம அண்ணு எம். எல். ஏ. ஆகிவிட்டார்
எலக்ஷனில் ஜெயித்துவிட்டார்

என்று சிரிப்பும் பேச்சும் குழையக் குழையக் கூறினர்,

தம்பி! கோவிந்தவாடி கிராமத்திலே, நான் கண்ட முதற் காட்சியையும், நாமக்கல் அருகே உள்ளே சிற்றூரில் சித்தய்யன் என்னிடமிருந்த 'மைக்'கைப் பறித்துக் கொண்டு பேசிய காட்சியையும், மனக்கண்ணுலே பார், படமும் தெரியும் பாடமும் கிடைக்கும்.

கோவிந்தவாடி கிராமத்திலே, முதலிலே, எனக்கு ஏற்பட்ட திகைப்பு. வெட்கம், கோபம், சலிப்பு. இவைகளை, என்னுடன் பணியாற்றியவர்கள் மக்களைச் சந்திப்பதிலும் உரையாடி விளக்கமளிப்பதிலும் தனித் திறமையும் தளராத ஊக்கமும் காட்டி விரட்டி அடித்து வெற்றி தேடித் தந்தனர்.

தம்பி! நான் இந்தச் சம்பவத்தைக் கூறுவதற்குக் காரணம், நாம் தேர்தலில் ஈடுபட்டோமே தவிர. அதற்கான பக்குவத்தை பயிற்சியைப் போதுமான அளவு பெறுவதற்கு நமக்குக் காலம் போதுமான அளவு கிடைக்கவில்லை.

இந்தக் குறைமட்டுந்தாணு' நாம்—நான் உட்படத்தான்—பல தவறுகளை விவரமறியாத காரணத்தால் புரிந்திருக்கிறோம்.

தொகுதிகளின் தன்மையை ஆராய்ந்து அறிதல்

எவரெவர் எந்தெந்தத் தொகுதியில் ஈடுபடுஈ நல்வாய்ப்பு உளது என்பதைத் தெரிந்து கொள்ளுதல்

போன்ற 'அரிச்சுவடி'யே நாம் சரியான முறையில் பெற்றிருந்தோமில்லை.

# படமும் பாடமும் (2)

நமது மாநாடு கூட்டுவதற்கு நாம், 'திடல்' தேடிப் பெறுவதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சியைவிட, அதிலே காட்டும் திறமையைவிட, குறைவாகவே, தேர்தல் தொகுதிகளை ஆராய்வதிலும், யார் எந்தத் தொகுதிக்கு என்பதுபற்றி தீர்மானிப்பதிலும், காட்டியிருக்கிறோம்.

இவ்வளவு 'குறைபாடு'கள் இருந்தும், நாம் பதினாறு இலட்சம் வாக்குகளைப் பெற்றோம்!! வானம் பார்த்த பூமி என்ற நிலையிலேயே விளைச்சல் குறிப்பிடத்தக்க அளவு என்றால், நல்ல பாசனவசதியும் கிடைத்து விட்டால் விளைச்சல், தரமாகத் தானே இருக்கும்! அந்த முறையிலே எவ்வளவோ

திறமைக் குறைவு

தெளிவுக் குறைவு

வசதிக் குறைவு

அனுபவக் குறைவு

இருந்தும் பதினாறு இலட்சம் 'ஓட்'டுகளுக்கு மேல் பெற்றிருக்கிறோம் என்றால், முறையும் சரிவர அறிந்து, வசதிகளையும் தேடிப் பெற்று, தேர்தலில் ஈடுபட்டால், இந்த பதினைந்து கண்டே பதறிப்போகிறார்களே சிலர், அவர்கள் மயங்கிக் கீழே சாய்ந்திடும் அளவுக்கல்லவா, வெற்றியின் எண்ணிக்கை உயரும்!!

வசதிகளைத் தேடிக்கொள்வதற்காகக் கூடிக் கூடிப் பேசினோம்—திட்டம் பல தீட்டினோம்—நானும் வீரதீரமாக வாக்களித்தேன் ஐந்து இலட்சம் திரட்ட வழிகண்டு பிடித்து விட்டேன் என்று! ஆனால், அந்தத் திட்டத்தின்படி காரியத்தைத் துவக்கவே இல்லை.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, இலட்சிய நடிகர் ராஜேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, இவர்கள், இந்தத் தேர்தல் செலவுக்கென்றே ஒரு நல்ல நிதி திரட்டி உதவவேண்டும் என்பதற்காக, ஒரு படத்தில் ஊதியமே பெறாமல் நடித்துத் தருவதாக முன் வந்தனர். நான்தான் அவர்கள் தர இருந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி, சில லட்சரூபாய்கள் கிடைப்பதற்கான வாய்ப்பைப்பெறத் தவறிவிட்டேன்.

அந்தத் தவறு, என்ன தொல்லையைத் தந்தது என்கிறாய்!

தேர்தல் நேரத்தில் தாங்க முடியாத பணமுடை!!

## வரவேற்கிறோம்!

சிறந்த சிறிய தரமான சிறுகதைகளையும், சுவையான இலக்கிய கட்டுரைகளையும்,

சூடான, சுவையான அரசியல் விமர்சனங்களையும், கட்டுரைகளையும் பெரிதும் வரவேற்கிறோம்.

அரசியல் விளக்கங்கள், விமர்சனங்களாயின் அந்தந்த வார புதன்கிழமைக்குள் அலுவலகத்திற்குக் கிடைக்க வேண்டும்.

ஆசிரியர்,
"காஞ்சி"

நூறு இடங்களுக்கு மேல் போட்டியிடுகிறோம்.

பணபலம் இல்லை—அதனை ஓரளவுக்கேனும் பெறத்தக்க வாய்ப்பு கண்ணுக்குத் தெரிந்தும் பயன்படுத்திக்கொள்ள தவறிவிட்டோம்.

பாய்மரமும் இல்லை—சுழற் காற்றும் அடிக்கிறது—கலம் என்ன கதி? என்று கேட்கும் நிலை அல்லவா இது.

இந்த நிலையிலே, இடம் 15 தான் என்றாலும், கிடைத்த ஓட்டுகள் 16-இலட்சத்துக்கு மேல் என்றால், தம்பி! அது உன் அறிவாற்றலின் விளைவு என்பதன்றி வேறென்ன? நாட்டு மக்களுக்கு, நாம் எடுத்துக்கூறி வருவது, புரிந்துவிட்டது என்பதுதானே இதன் பொருள்!

பெருமைக்கும் பூரிப்புக்கும் உரிய நிலைதான் இது—கேலி பேசுவோரும், உள்ளூர இதனை அறிவர்.

ஐயம் சிறிதேனும் உள்ளவர்களை, வேண்டுமானால் வெற்றிபெற்ற காங்கிரஸ்காரர் படும் வேதனையையும் பார்க்கச் சொல்லு. தோற்றாலும், முக மலர்ச்சியுடன் இருக்கும் நமது கழகத் தோழரையும் பார்த்திடச் சொல்.

தம்பி! கேரளத்தில் கம்யூனிஸ்டு அமைச்சரவை ஏற்பட்டிருக்கிறது. முற்போக்கு எண்ணம் கொண்டவர் அனைவரும் வாழ்த்தி வரவேற்க வேண்டிய மகத்தான நிகழ்ச்சி இது. வெற்றிபெற்று அமைச்சரவை அமைத்த கம்யூனிஸ்டுகளை வாழ்த்துவோம். தம்பி, உளமாற அமைச்சர் அவைதான்

விற்பனைக்குத் தயார்!

# "அரசியல் உலகில் அண்ணா"

**(தொகுப்பு: சி. என். ஏ. பாபு)**

சட்டமன்ற, இலக்கிய அரசியல் ஆகிய சொற்பொழிவுகளைத் தாங்கி சிறந்த நூலாக வெளிவந்திருக்கிறது.

காலத்தால் போற்றப்படும் கருத்துக் கருவூலம் எந்த மொழியினரும், எந்த நாட்டவரும் விரும்பும் கருத்துப் பெட்டகம். நிறைந்த பக்கங்களைத் தாங்கி குறைந்த விலையோடு வெளிவந்துள்ளன!

**விலை ரூ. 4/- (நான்கேதான்)**

**விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு.**

**விபரங்களுக்கு:**

நிர்வாகி,

**"பாபு பதிப்பகம்"**

**168, ஜோன்சு சாலை,**

**சைதை, சென்னை-15.**


கம்யூனிஸ்டுகள் அமைத்தனரே தவிர, ஆட்சி எம்மிடம்தான் என்று டில்லியில் காங்கிரஸ் தலைவர்கள் எக்காளமிடுகின்றனர்! வெட்கத்தையும் துக்கத்தையும் மறைத்துக்கொள்ள, இது அவர்களுக்கு உதவுகிறது.

சங்கரன் நம்பூதிரிபட் என்ற கம்யூனிஸ்டு தலைவர், அமைச்சர் அவை அமைத்திருக்கிறார்.

கேரளத்துக் கவர்னர் மாளிகையிலே மூவர்ணக் கொடி பறக்கிறது! செங்கொடியைச் சிறப்புடன் பறக்க விட்டிருக்கும் கம்யூனிஸ்டு கட்சி, அமைச்சர் அவை அமைத்திருக்கிறது.

தம்பி! கேரளத்துக் காட்சியை மனக் கண்ணாலே காண்கிறாய் அல்லவா!

கேரளத்தில், கம்யூனிஸ்டு கட்சி பெற்றுள்ள ஓட்டுகள், 19,86,369! அமைச்சர் அவை அமைத்து அவனி எங்கும் கவனித்துப் பார்த்திடத்தக்க நிலையைப் பெற்றுவிட்டனர்.

தம்பி! பதினைந்தே இடங்களைத்தானே பெற்றார்கள் என்று நம்மைக் கேலி செய்கிறார்களல்லவா இந்தக் கேலியைத் தாங்கிக் கொள்ளும் நாம் பதினாறு இலட்சம் ஓட்டுகளுக்கு மேல் பெற்றிருக்கிறோம்.

பத்தொன்பது இலட்சத்துக்கு ஒரு மந்திரிசபை அமைகிறது—கேரளத்தில்.

பதினாறு இலட்சம் நமக்கு— இடமோ பதினைந்துதான்!

என்னதான், ஏளனம் பேசட்டும், தம்பி! 19 இலட்சம் ஓட்டுகள் கேரளத்தில் அமைச்சர் அவை ஏற்பட உதவிற்று! என்ற உண்மையை அறிந்த பிறகு, நாம் 16 இலட்சத்தை அலட்சியமாக, கேவலமாகப் பேசத் தோன்றாது, அரசியலில் பொறுப்பும், நேர்மையும் வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களுக்கு, மற்றவர்பற்றி நமக்கென்ன கவலை.

அண்ணன்,

அண்ணாதுரை

(7—4—57 திராவிட நாடு இதழில்)

சிறுகதை :

# இடைவெளி

செ. இளங்கோதாசன்

சென்னையிலிருந்து மதுரைக்குச் செல்லும் 'பாண்டியன் விரைவு வண்டியின் முதல் வகுப்புப் பெட்டியில் அமர்ந்திருந்த வசந்தியின் மனப்பறவையானது அந்த புகைவண்டியின் வேகத்தைவிடப் பன்மடங்கு வேகமாகப் பறந்து சென்றது திண்டுக்கல்லை நோக்கி!

வசந்தியைப் பற்றி ஒருசிலவரிகள்......

இருபது வயதே நிரம்பிய இளஞ்சிட்டுவான வசந்தியின் சொந்த ஊர் திண்டுக்கல். பெரிய மில் அதிபரின் மகள். அவளை ஒரு சிறந்த டாக்டராக்கிப் பார்க்க வேண்டுமென விரும்பிய அவளுடைய தந்தையின் கனவை நனவாக்கும் பொருட்டு சென்னை மருத்துவக் கல்லூரியொன்றில் பயிலும் வசந்தி தன் விடுமுறையை இன்பப் பொழுதாக்கிக் கழிக்கத் திட்டமிட்டுத்தான் திண்டுக்கல்லை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

அவளுடைய மனப்பறவை அந்தப் புகைவண்டியின் வேகத்தைவிடப் பன் மடங்கு வேகமாக முன்னேக்கிப் பறந்து சென்றதற்குக் காரணம் அவளுடைய கயல் விழியிரண்டில் புகுந்து உள்ளச் சிறையில் சிறைபிடிக்கப்பட்டக் காதலனையும்; இதயத்தில் கொட்டிக் கிடக்கும் உணர்ச்சிகளை னும், தாகமலர்களைக் காதலுக்குப் பரிசாக தரவேண்டும் என்ற எண்ணமும்தான்.

காதல் உணர்ச்சிகள் தூண்டிவிட்டதொரு உந்தலினுல் தன் சூட்கேஸைத் திறந்து அதிலிருந்து நாட்குறிப்பொன்றை எடுத்தாள் வசந்தி. பக்கங்கள் பலவற்றைப் புரட்டியபின் அந்த சிங்காரியின் மலர்க் கரங்களில் ஒரு வாலிபனின் புகைப்படமொன்று சரணடைந்திருந்தது. அந்த வாலிபனைக் கண்டவுடன் வசந்தியின் முகமெங்கும் நாணங் கலந்த செஞ்சாயம் படர்ந்தோடியது.

இளமையின் துடிப்பில் வாழ்க்கைப் பயணத்தை கடந்து கொண்டிருக்கும் அவளுடைய ஒருமித்த உணர்ச்சிகளனைத்தும் ஊசிமுனையில் நின்றுவிட்டதால் தன் செப்பவள இதழ்களை அந்தப் புகைப்படத்தில் பதித்தெடுத்தாள் பலமுறை. அவளுடைய செய்கைக்கும் நினைப்புக்கும் உள்ள இடைவெளிதான் என்ன! அங்கு அப்போது மலர்ந்து உதிர்ந்த ஓசைகளை யாராலும் கேட்க இயலவில்லை காரணம்— அவள் ரிசர்வ் செய்திருந்த அந்தப் பெட்டியில் அவளைத்தவிர ஐம்பது வயது மதிக்கத் தக்க மற்றெருவருமே இருந்த காரணத்தாலும்; அந்த ஒருவரும் நித்திரைக் கன்னியை சுகமாகத் தழுவி அணைத்துக் கொண்டிருந்ததாலும் அவளுக்கு எந்தவித இடையூறும் இல்லாமலிருந்தது.

அவளுடைய நீள்விழிகளிரண்டும் அந்த நாட்குறிப்பின் பக்கமொன்றில் நிலைகுத்தி நின்றன அதில்—"நான் அன்று எங்களுடைய மில்லுக்குச் சென்றேன். அங்கேதான் அவரை முதன்முதலாக சந்தித்தேன். சந்தித்தேன் என்பதைவிட மயங்கி விட்டேன்... இல்லையில்லை...மயக்கப்பட்டேன். .. அதுவும் இல்லை 'நானே என் இதயத்தை இழந்து விட்டேன்' என்பதே பொறுத்தமாகும்." அடுத்த நிகழ்ச்சிக்கு அவளுடைய உள்ளம் அடியெடுத்து வைத்தது.

நான் ஒரு மிஷினில் எதையோக் குனிந்து பார்த்தபோது என் சேலைதலைப்பு நழுவி அந்த மிஷினில் சிக்கிப் போகும் சமயம் வசந்தி என்று கூவி என் சேலை தலைப்பைப் பிடித்திழுத்தபோது அவருடைய முழங்கை என் மார்பகத்தின்மீது மோதி என்னுல் மீளமுடியாத ஒரு உலகத்தைக் காட்டி இன்ப உணர்வைத் தூண்டி விட்டார். நான் மயக்கவுலகில் இயங்கிக் கொண்டிருந்த அதேசமயம்—

'எக்ஸ் க்யூஸ் மி மேடம் ஐ ஆம் வெரி சாரி' என்று கூறி என் மயக்கத்தையும் கலைத்து விட்டார். அந்த நாள் என் வாழ்வில் ஒரு இன்பநாள். இதுதான் அந்த நாட்குறிப்பில் எழுதப்பட்டிருந்தது. முன்னேக்கிச் சென்று கொண்டிருந்த புகைவண்டியில் அமர்ந்திருந்த வசந்தியின் எண்ணங்கள் மட்டும் கடந்தகால வாழ்வின் கரையை தொட்டவண்ண மிருந்தது.

'ராமு!' இதுதான் வசந்தியினுடைய உள்ளத்தைக் கவர்ந்தவனின் பெயர். வசந்தியினுடைய பாக்டரியில் தொழிலாளியாக வேலைபார்க்கும் அவன் படித்து பி ஏ பட்டம் வாங்கியவனுங்கூட. வேலை கிடைக்காத காரணத்தால் தான் ஒரு பட்டதாரி

என்பதையும் மறந்து தன் குடும்பத்தின் வறுமையைப் போக்கவேண்டும் என்ற இலட்சிய வேட்கையினால்தான் அவன் ஒரு தொழிலாளியாக வேலை பார்த்து வந்தான்.

அப்போதுதான் மேலே கூறிய அந்த நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் வசந்தியின் உள்ளம் நாளுக்கு நாள் ராமுவிடம்; அதுவும் அவன் ஒரு தொழிலாளி எனும் பாகுபாடு பார்க்காமல் நெருங்கி நெருங்கிச் சென்றது. ஆனால் ராமுவின் உள்ளத்தில் அந்தவித நினைப்புக்கு அடிகோலும் சலனமே ஏற்படவில்லை. 'பட்டும்படாமல் வாழை இலையில் தண்ணீர் உருண்டோடுவதைப் போல அவனுடைய எண்ணமிருந்தது; அவளுடைய எண்ணத்திற்கும் அவனுடைய எண்ணத்திற்கும் உள்ள இடைவெளியானது பணத்திற்கும் பண்புக்கும் உள்ள இடைவெளியைப் போன்றிருந்தது.

ராமு தன்னிடமிருந்து விலகி விலகிச் செல்வதைக் கண்ட வசந்தியினுடைய மலர் மனம் சற்றே வாடினாலும் 'நம்பிக்கை' எனும் குளிர் நிலவின் அமுத ஒளியினால் அவளுடைய மனம் புது உவகைப் பெற்றுக் கொண்டே இருந்தது. அவனிடம் எவ்வளவோ நாட்கள் நெருங்கிச் சென்ற அவளால் அவனுடைய உள்ளத்தை மட்டும் நெருங்க முடியவில்லை. அவனோ அவளிடமிருந்து இல்லையில்லை... அவளின் அந்தஸ்திலும்; ஆசியிலும்; படாடோபத்திலும் விலகி விலகிச் சென்றான்.

இதற்குமேலும் தன் உள்ளக் குமுறல்களையும், உணர்ச்சிகளையும்; இதய ஆசைகளையும் கட்டுப்படுத்த இயலாத வசந்தி ராமுவிடம் நேரடியாகவே அவனுடைய விருப்பத்தைக் கேட்டாள்.

'ராமு என் உள்ளமும் அதில் பிறக்கின்ற உணர்ச்சிகளையும் தெரிந்துகொண்டு இன்னுமேன் என்னைக் கொல்லாமல் கொல்லுறீங்க?' என்றாள் வசந்தி.

'..................'

'ஏங்க ராமு நான் அழகா இல்லையா? உங்களுக்கு ஏற்றவளாயில்லையா'' சொல்லுங்க ராமு—சொல்லுங்க...என்றாள் வசந்தி.

மௌனமொழியில் பதிலளிப்பதைவிட அவனால் வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை. காரணம்—எதிர்த்துப் பதில் பேச முடியாத அளவுக்கு ஏதோ ஒரு அபூர்வசக்தி; மனதை ஈர்க்கக்கூடிய திறமை அவளிடம் கொட்டிக் கிடந்த காரணத்தால் அவன் உள்ளமும் அன்புப் படகேறி பாசமெனுங் கடலிலே நீந்துவதற்கு முடிவு செய்தது. "அவனுடைய உள்ளத்தின் ஆசைக்கும்; நடக்கவிருந்த செயலுக்கும் உள்ள இடைவெளியானது கடலுக்கும் காகித ஓடத்திற்கும் உள்ள இடைவெளியைப் போன்றிருந்தது.''

ஆண்டுகளிரண்டு காலப்புயலில் அடித்துச் செல்லப்பட்டது, பி. எஸ். ஸி. தேறிய வசந்தியும் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தாள். அதன்பிறகு ஆண்டொன்று உதிர்ந்தது. அந்த ஆண்டின் விடுமுறையைக் கழிப்பதற்குத் தான் திண்டுக்கல்லை நோக்கி வந்து கொண்டிருந்தாள் வசந்தி. அப்பொழுதான் அவளுடைய உள்ளப் பறவைக் கடந்தகால வாழ்வெனும் உலகிலேப் பறக்கத் தொடங்கியிருந்தது. அவளுடைய கடந்தகால வாழ்வின் இன்பமயமான மனக்கோட்டையும்; வருங்காலத்தைப் பற்றிய அவளுடைய இன்பம் நிறைந்த; துடிப்புமிக்க; ஆசைகொண்ட எண்ணங்கள் மட்டும் நிலைத்து விட்டால்! 'இடைவெளி' என்ற சொல்லே இல்லாமற் போய்விடும்.

புகைவண்டி நிலையத்தில் அவளுடைய தந்தை அவளுக்காகக் காத்திருந்தார். மகளைப் பார்த்தவுடன் உள்ளத்தில் உவகை பொங்க மகிழ்ச்சியுடன் வாம்மா வசந்தி... பிரயாணமெல்லாம்சவுக்கரியமா இருந்துச்சா என்றார் முத்துலிங்கம்.

'எல்லாம் சவுகரியமா இருந்ததுங்கப்பா' என்றாள் வசந்தி. இருவரும் புகைவண்டி நிலையத்தைவிட்டு வெளியே வந்து தங்களுடைய காரில் ஏறியமர்ந்து தங்களுடைய இல்லத்தை நோக்கிச் சென்றனர். இல்லத்தை வந்தடைந்ததும் பிரயாணக் களைப்புத்தீர நித்திரைக் கன்னியுடன் சிறிது நேரம் உறவாடினாள்.

பொழுது புலர்ந்தது!

துயில்களைந்து எழுந்த வசந்தி குளித்துவிட்டுப் பொன்னிற மேனியிலே செந்நிறப் புடவையணிந்து; வெண்மைநிற ஜாக்கெட் அணிந்து கூந்தலைச் சடையாகப் பின்னி; கூந்தலிலே மல்லிகை மலர்சூடி; நெற்றியிலேக் குங்குமத் திலகமிட்டு; அந்த திலகத்திற்குக் கீழே திருநீறு தீட்டி; செழுமைமிக்கக் கன்னங்களிலே மலர்ச்சி பொங்க; கனிரச இதழ்களிலே குறுநகை கோலமிட' கொடியிடை ஒடிய திருமகளைப்போல் நடைபழகி வந்த தன் மகளைக் கண்டவுடன் தாவி சேர்த்து அணைத்து உச்சி மோந்தாள் அவளுடைய தாயான சரஸ்வதி.

# காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்!
# காசுள்ளபோதே சேர்த்துக்கொள்!!

"எச்செலவும் வருவாய்க்குள் பண்ணவேண்டும்,
எதிர்காலத் தேவைகளை எண்ண வேண்டும்,
மிச்சமென்று சிறிதேனும் சேர்த்து வைத்தால்-
மீறி ஒரு துன்பம்வரின் தீர்த்து வைக்கும்!" —நாமக்கல் கவிஞர்.

எனவே,

சம்பாதித்துக் கொண்டிருக்கும் பொழுதே தொடர்வைப்புத் தொகைத் திட்டத்தில் (ரிகரிங் டெபாசிட் திட்டம்) அல்லது வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தில் (க்யுமுலேடிவ் டைம் டெபாசிட் திட்டம்) ஒரு கணக்கைத் துவக்கி மாதம் 5 அல்லது 10 ரூபாய் வீதம் கட்டிட முன் வாருங்கள். இத்திட்டங்களின்கீழ் செலுத்தும் தொகை பின்கண்டவாறு பெருகும்!

| மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| **தொடர்வைப்புத் தொகை திட்டம்** | | |
| ரூபாய் 5. | ரூபாய் 360 | —— |
| ரூபாய் 10. | ரூபாய் 720 | —— |
| **வளரும் மாதச் சேமிப்புத் திட்டம்:** | | |
| ரூபாய் 5. | —— | ரூபாய் 785 |
| ரூபாய் 10 | —— | ரூபாய் 1,570 |

தொடர்வைப்புத் தொகைத் திட்டத்தின்கீழ் 1—7—72க்குப் பிறகு கணக்குத் துவங்குகின்றவர்கள் எதிர்பாராதவிதமாக இறந்து விட்டால், 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களுடைய வாரிசுதார்களுக்குக் கிடைக்கும். சிறு சேமிப்பு செய்பவர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது.

**★ இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்! ★**

— சிறுசேமிப்புத்துறை,
தமிழ்நாடு அரசு.


பாசமிக்கத் தன் அன்னையின் அணைப்பிலிருந்து விடுதலைபெற்று உள்ளே சென்ற வசந்தி தன் சூட்கேஸைத் திறந்து அதிலிருந்து காகிதப்பை யொன்றை எடுத்துக் கொண்டு தன் தம்பியான ஆனந்தின் அறைக்குச் சென்றாள்.

"ஆனந்த் சவுக்கியமா?" என்றாள் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டே.

"வெரி பைன் சிஸ்டர்" என்றான் ஆனந்த்

ஆனந்த்! இந்தப் பேண்ட்டும்; ஷர்ட்டும் நல்லாயிருக்கானு பாரு...உனக்குத்தான் என்றுகூறி தான் எடுத்து வந்த காகிதப் பையை அவனிடம் கொடுத்தாள் வசந்தி.

அதை வாங்கிப் பிரித்துப் பார்த்த ஆனந்த், "சிஸ்டர் யுவர் செலக்சன் இஸ் வெரி பைன்" என்றான்.

"உன் மனதுக்கு நல்லாயிருக்குது. அவர் மனதுக்கு எப்படியோ?" என்று தன் ஆத்மாவிற்கு மட்டுமே கேட்கும்படியாகச் சொல்லிக்கொண்டே அங்கிருந்த மேஜையின் மேல் தன் கண்ணோட்டத்தைச் செலுத்தினாள். அங்கே பரப்பிக் கிடந்த தன் தம்பியின் புத்தகங்களுக்கிடையில் ஒரு திருமணப் பத்திரிக்கை தலை நீட்டிக் கொண்டிருந்தது. அதை எடுத்துப் பார்த்தாள் வசந்தி அதில் மணமகன் என்றிருக்கும் இடத்திலுள்ள மணமகனின் பெயர் அறுத்தெடுக்கப்பட்டிருந்தது. வசந்தியின் செயலைக் கண்ட ஆனந்தின் முகத்தில் சற்றே துன்ப ரேகைப் படர்ந்தது.

மேற்கொண்டு அந்தப் பத்திரிக்கையில் தன் கண்ணோட்டத்தைச் செலுத்தாமல் "டேய் ஆனந்த் அ...அவ...ரை இன்னிக்கு சாயங்காலம் அங்கே வரச் சொல்றியா?" என்றாள் வசந்தி.

இந்த வேண்டுகோளைக் கேட்டவுடன் அவன் முகத்தில் இதுவரை குடிகொண்டிருந்த சிறியதொரு மகிழ்ச்சிக்குமிழும் வெடித்துச் சிதறியது. நடந்து விட்ட 'அந்த' விஷயத்தை எப்படிச் சொல்லுவது எனத் தெரியாமல் சரிங்க...சிஸ்டர்...சாயங்காலம் அவரை வரச்சொல்றேன் என்றுகூறிக்

கொண்டே முகத்தை மறுபுறம் திரும்பிக் கொண்டான். அப்போது—அங்கே—அவன் முகத்திலேக் கண்ணீர்த்துளிகள் உருண் டோடின. 'அந்த உருண்டோடும் கண்ணீர்த் துளிகளைப்போல் தன் அக்காவின் வாழ்க்கை யும் அப்படி உருட்டிவிடப்பட்டு விட்டதே!' என்று நினைத்துத்தான் கண்ணீர்விட்டான் ஆனந்த்.

இன்ப நினைவுகளோடு அவள் எதிர் பார்த்துக் காத்திருந்த அந்தி மயங்கும் மாலை வந்ததும் பூங்காவை அடைந்தாள்.

தன் மனதை எவ்வளவோ கட்டுப் படுத்திக் கொண்டு வந்த ராமு, வசந்தியின் அருகில் வந்தவுடன் அவனையறியாமலே அங்கு நின்றான்.

"வாங்க...ராமு...வாங்க" என்று அவ ளுடைய இதழ்கள் சொற்களை உதிர்த் தாலும்; ஆசையும் ஆவலுங் கொண்ட கருவண்டுக் கண்களோ அவன் மேனி யெனும் அழகுக் கடலில் அலைபாய்ந்து கொண்டிருந்தது, அவனோ 'காந்தத்தின் ஈர்ப்பில் சிக்கிய இரும்புத் துண்டைப்போல் அவளுடைய கண்களின் பிடியில் சிக்கி நின்றான்.'

வாழ்க்கையெனும் சோலையிலே இன்ப மெனும் தென்றலை அனுபவித்துவிட்ட ராமுவும்; வாழ்க்கையில் வசந்தத்தை எட்டிப் பிடிக்க துடிக்கின்ற வசந்தியும் சிறிதுநேரம் பேசாமல் மௌனமாக இருந் தனர், முடிவில் வசந்தியே பேச்சைத் தொடர்ந்தாள். வார்த்தைகள் தடுமாறிய வண்ணம் வெளிவந்தன, தடுமாறி வந்த அவளுடைய ஒவ்வொரு சொல்லும் சுடும் நெருப்பாக; இதயத்தைப் பிளக்கும் கோடாரியாக இருந்தது,

'என்னங்க ராமு சௌ...க்கியமா இருக் கிங்களா' என்றாள் வசந்தி,

'..........................'

'உங்களப்......பார்க்காம என் உடலும் உள்ளமும் எப்படி வாடிவிட்டது தெரியு மாங்க?'

'..........................'

'இன்னும் நான்கு ஆண்டுகள் நம் இருவருக்குமிடையே இடைவெளி தேவங்க ராமு! அதுவரைக்கும் பொறுத்துக்கங்க ராமு!' என்றாள் வசந்தி; தனக்கும் அவனுக்கு முள்ள இடைவெளி நிரந்தரமாக்கப்பட்டு விட்டதை உணராமல்.

'வசந்தி எ...என்...னை மன்னித்துவிடு!' உனக்கும் எனக்கும் உள்ள இடைவெளி நிரந்தரமாக்கி விடப்பட்டது வசந்தி என்றான் ராமு.

'ராமு! நீங்கள் சொல்வதின்......' என்று முடிக்காமல் நிறுத்தினாள் வசந்தி.

'வசந்தி எனக்குத் திரு...மணம் முடிந்து விட்டது எனக்காக என் மனைவி வீட்டிலக் காத்துக்கொண்டு இருப்பா...தயவுசெய்து என்னை மறந்துவிடு.' என்று கூறினான் ராமு.

'உங்களுக்காக காலம்முழுதும் காத்துக் கொண்டிருந்தேனே அதற்காக நீங்க செய்யுற உதவி இதுதானா ராமு...என்னிடம் ஒரு வார்த்தை...ஒ...ரே...ஒரு வார்த்தைக் கேட்டிருக்கக் கூடாதா ராமு...அதற்குக் கூடவா நான் தகுதியில்லாமப் போயிட்டேன் ராமு. வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துக்க எப்படி ராமு உங்களுக்கு மனசு வந்தது' என்றாள் வசந்தி.

'என் குடும்பத்தினுடைய அப்போதைய சூழ்நிலையில என் தங்கையின் நல்வாழ்வுக் காக உன்னுடைய காதலுக்கு இடைவெளி கொடுத்து; என் தங்கையின் கணவனுடைய தங்கையை நான் மணக்கவேண்டி வந்து விட்டது வசந்தி...ஆனால் ஒன்று வசந்தி! உங்க குடும்பத்துல எல்லாருக்குமே தெரியும் நான் திருமணம் செய்தது. உங்கப்பாகூட வந்து வாழ்த்தினாரே' என்றான் ராமு.

புரியாத ஒரு உண்மை அப்போதுதான் அவளுக்குப் புலப்பட்டது. தன் தம்பியின் மேஜைமேல் கிடந்த திருமணப் பத்திரிக்கை யில் மணமகன் பெயரைத் தன் தம்பிக் கிழித்தெடுத்ததின் நோக்கம். இவ்வித மான கண்ணோட்டம் சிந்தனையில் மின்னி மறைந்தவுடன் 'எல்லாருமா சேர்ந்து எனக்குத் துரோகம் செஞ்சுட்டீங்க ராமு... என்றாள் வசந்தி.'

'நான் துரோகிதான் வசந்தி துரோகி தான். நான் உனக்கு செஞ்ச துரோகத்துக் காக அனலில் விழுந்த புழுவாக தினமும் துடிச்சுக்கிட்டு இருக்கேன் வசந்தி...என்று கூறும்போதே அவனையறியாமல் கண்ணீர்த் துளிகள் பெருகி வந்தது.'

அந்தக் கண்ணீரைக் கண்ட வசந்தி... பழைய அன்பின் மிகுதியால்; காதல் துடிப் பால் தன்னையறியாமலேயே துடைத்துவிடச் செய்ய முற்படும்போது அவளையறியாம லேயே சென்ற கரங்கள் தானாகக் கீழே இறங்கியது. 'அதனுடைய பொருள் அதற்குள் அவள் கல்மனத்தை பெற்று விட்டாள் என்பதல்ல...அவன் வேறொருத் திக்குச் சொந்தமாகி விட்டவன் என்பதால் தான்'

தன் மனதைத்திடப்படுத்திக் கொண்டு அவனுக்கென வாங்கி வந்திருந்த பையைத் திறந்து அதிலிருந்த பேண்டையும்; சர்ட்டை யும் எடுத்து ராமு உங்களுக்காக நானே கடைக்குச் சென்று செலக்ட்பண்ணி

தயாராகிறது!

# 'காஞ்சி'

## கலைஞர் பொன்விழா மலர்.

பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றல்
கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களின்
புகழ்மணம் பரப்பும் நன்மலர்,
இப் பொன்மலர்!

முன்னணித் தலைவர்கள்
முற்போக்கு எழுத்தாளர்கள்
ஆகியோரது அரிய படைப்புக்களுடன்
மூவண்ண முகப்போடு சூன் திங்களில் வெளிவருகிறது!

தேவைக்கு உடன் தொடர்பு கொள்க:-

—மேலாளர் "காஞ்சி"
காஞ்சிபுரம் 631503.


வாங்கினது...இதை மறுக்காம வாங்கிக்கங்க ராமு என்றாள் வசந்தி.

தயங்கினான் ராமு.

என்னுடைய எண்ணற்ற எண்ணங்களை யும் கனவுகளையும்; இதயத்து ஆசைகளையுந் தான் கனவா ஆக்கிட்டீங்க...இந்த ஒரு சிறிய ஆசையக் கூடவா ராமு நிறைவேற்றக் கூடாது. காதலின் பரிசா என்னையே தரலாம்னு இருந்தேன்...அதற்கு காலமும்; சூழ்நிலையும் இடந்தரல...இதை யாவது வாங்கிக்கங்க ராமு என்றாள் வசந்தி.

மறுக்க முடியாமல் வாங்கிக் கொண் டான் ராமு...கண்ணீர்மல்கும் கண்களுடன் அதையும் அவளையும் மாறி மாறிப் பார்த் தான் ராமு. பேண்ட்டும் சர்ட்டும் இருந்த பையானது சிறிது தூரத்தில் கிடந்தது. அதைப் பார்த்து,

"ராமு! இன்னும் கொஞ்ச நேரத்துல நமக்குள்ள இடைவெளி நிரந்தரமாயிடும்... அதாவது அதோ அந்தப் பைக்கும்; பேண்ட் சர்ட்டுக்கும் உள்ள இடைவெளியைப்போல" அப்புறம் நீங்க யாரோ...நான் யாரோ... நீங்க...எங்கிருந்தாலும் நல்லா வாழனும். அதுதான் என் பிரார்த்தனை என்றுகூறி விட்டு வேகமாகச் சென்றாள் வசந்தி.

அவள் செல்வதையே துயரம் நிரம்பிய கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்த ராமுவின் கண்களுக்கு கண்ணீர் திரை யிட்டது. அங்கு அப்போது வீசிய காற்றில் அவள் சுட்டிக் காட்டிய அந்த காகிதப் பையானது பறந்து சென்றது. அதைப் போலத்தான் அவளும் அவனுடைய இதயத்தைவிட்டு...இல்லையில்லை அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டாள். இது வரை அவனுக்கும்; அவளுக்கும் உள்ள இடைவெளியானது நிரந்தரமாகியது.

இடைவெளியானது நாட்டுக்குரிய கலாச் சாரத்திலும்; பண்பாட்டிலும் மாறுபடுவ தைப் போல காதலிலும் இடைவெளி நிச்சயமாக தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து துவண்டுபோய் கட்டிலில் தொப் பென வீழ்ந்தாள் வசந்தி. இனிமேல் அவளுக் கும் இன்பத்திற்கும் உள்ள இடைவெளி தான் எவ்வளவோ? காலந்தான் விடைகூற வேண்டும்......

★

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

லும், நீதியின் பேராலும் யார்யார் கொள்ளையடிக்கிறார்களோ, யார்யார் மற்றவர்களை ஏமாற்றுகிறார்களோ, யார்யார் பிறர் உழைப்பில் உண்டு இன்பம் அனுபவிக்கிறார்களோ அத்தனை பேர்களையும் துவேசிக்கிறார் பாரதிதாசன்,"— (ஏ. கே. செட்டியார்) அடக்குமுறைச் சட்டம் காட்டி, அழிக்கும் முறைகள் பல தீட்டி ஒடுக்கும் சிறையினைத் திறந்து காட்டி, பகைவர் திராவிடரின் உணர்வுகளை ஒடுக்க முற்படுவார்களானால், அவர்களே திடுக்கிடும் வகையில், திராவிடர் தம் எழுச்சியானது இருக்குமென. "ஆவேசத்தையும் உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயர்கவி பாரதிதாசன்" (வ. ரா) "அறிவுக் கோயில்கள் கட்டி நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞர் பாரதிதாசன்" பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

"அடக்முறை செய்திடல்முடியும்-கொள்கை
அழிக்குமுறை எவ்வாறு முடியும்?
ஒடுக்குசிறை காட்டுதல் முடியும்—உணர்வு
ஒடுக்குதல் எவ்வாறு முடியும்?
திடுக்கிடச் செய்திடும் உன்னை—இத்
திராவிடர் எழுச்சியை மாற்றவா முடியும்?"

என்று கொதித்தெழுந்து கேட்கின்றார்.

"எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும் பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்" (திரு. வி. க) என்று பாராட்டுகிறார் என்றால், அவர்தந்த கருத்துக்களின் திண்மையும் அனைத்தையும் மீறிக்கொண்டு சமுதாயதில், எதிர்நீச்சல் போடும் திறனும், மூடவழக்கங்களைச்சாடும் விதமுமே காரணம் ஆகும். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்று கேட்ட ஒரு சமுதாயத்திற்கு,

"கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம் அந்நி லத்தில்
புல்விளைத் திடலாம்; நல்ல
புதல்வர் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறி வுடைய மக்கள்
விளைவது நவிலவோ நான்!"

என்று கேட்டுப் பெண்கல்வி தமிழ்ச் சமுதாயத்திற்குத் தேவையே, அப்போது தான், "நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகமாக முடியும்" என்று எதிர்ப்பணிக்கு வாய்ப்பூட்டுப் போட்டு விடுகின்றார்.

"பாரதிதாசனுருடன் பழகுவதின் மூலம் பாரதியைப் பார்க்கவில்லையே அவருடன் பழகவில்லையே என்ற குறை எனக்கு நிவர்த்தியாயிற்று" (கல்கி) என்றும் "பாரதியார் சொல்லும் வீரத் தமிழ்ச் சொல்லின்பத்தைப் பாரதிதாசனின் பாடல்களில் காணலாம்" (பரலி. சு. நெல்லையப்பர்) என்றும் சொல்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம், "தமிழே வாழ்வுப் பொழிலாக வேண்டும்" என்ற குறிக்கோள் கொண்டு, 'கருங்குயிலிடம்' கூட,

"கன்னடம்தெ லுங்குமலை யாளம்
கழிதுளுவம்
முன்னடைத்தும் மூவாது மூள்பகைக்கும்
சேராது
மன்னும் தமிழ்தான்இவ் வையத்தை
யாள்க—எனக்
கன்னற் குரலெடுத்துக் கூவாய் கருங்
குயிலே!"

என்று, தம்முடைய உள்ளக் கிடக்கையினை எந்த அளவுக்கு இயற்கையோடு ஒன்றுபடுத்திக் காட்டுகிறார் என்பதால் அறியலாம்.

"விடுதலை எல்லாப கிளர்ச்சியால் வெல்லும்
விடுதலை வேட்கை வெறிகொண்ட வீரன்"

(நாமக்கல்லார்) பாரதிதாசன் மனிதனை முன் நிறுத்தி, அவனுடைய சமுதாயத்தின் மேடு பள்ளக் கொடுமைகளை விளக்கிக் காட்டி, அவன் திறன் ஆற்றலை வலியுறுத்தி, அவனது இறுதிப் பெரும் இலட்சியம் என்ன என்பதை நினைவுபடுத்திக் காட்டும் கவிஞர்,

"தோளை உயர்த்து; சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏறு!
விழித்த விழியில் மேதினிக்கு ஒளிசெய்!
நகைப்பை முழக்கு, நடத்து லோகத்தை!
உன்வீடு உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டோடு நாட்டை இணைத்து, மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைபோல்
ஏறு! விடாமல் ஏறு மேன்மேல்!
அறிவை விரிவுசெய் அகண்ட மாக்கு
பிரிவிலை! எங்கும் பேதம் இல்லை
உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்!
வானைப் போல மக்களைத் தழுவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!"

என்று தெரிவிக்கிறார்.

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கப்
பட்டுகள் பிரமாதம்
நெசவே நெஞ்சையள்ளும்
சூர்தாக்கள்
பெல் பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள் ...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

"பாரதிதாசன் கவிதைகளைக் கவிக்காக ஒருமுறை, கருத்திற்காக ஒருமுறை, எழிலுக்காக ஒருமுறை படித்தேன்" (கி. ஆ. பெ. விசுவநாதம்) என அறிஞர் பெருமக்கள் அனைவரும் போற்றும் பாவேந்தர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், தமிழ் மொழிக்கும்—தமிழ் நாட்டிற்கும்—புதுத் தெளிவும், புத்துணர்வும் புத்தொளியும், புதுவாழ்வும், புது மெருகும் கூட்டியவர் ஆவார்.


பாரதிதாசன் அவர்கள் தமிழ்மொழியில், புதியவளைவும், நெளிவும், மெருகும் ஏற்றியவர். "எஞ்சாதிக்கு இவர்சாதி இழிவென்று சண்டையிட்டுக் கொண்டிருந்த மக்களைக் கண்டு, இந்த உலகில் எண்ணிலா மதங்களா? கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகளா" என்று வருந்தி"த் தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை கணிப்பரிய துயரமிது" என்று ஏங்கிச் "சாதிப் பிரிவுகளும், சமயப் பிரிவுகளும், நீதிப் பிழைகளும் நியமப் பிழைகளும்" கண்டு கொதித்தெழுந்து, 'உனக்கென்ன வாழ்வென் பாரை உதைக்கத்தான் உணர்ச்சி உண்டா? தனக்கென்று பிறர்க் கொன்றென்பான் தனைவீழ்த்த எழுதல் உண்டா?" என்று கேட்டு, பல்வேறு கருத்துக்களைச் சமுதாயத்தின் விழிப்புக்காகப் பாடியுள்ளார்.

இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற கவிஞராகவும். "தமிழ்நாட்டில் தமிழுக்குத் தலைமை தந்திடவும், தமிழ்ப் பண்பாடு தலைகாட்டவும், தனித்தமிழ் இயல்புக்கான சலுகைகளை மக்களிடையே பெற்றும், அடுக்களையில் அங்கணத்தில் வாயில்தோறும் வணிகத்துப் பலகை அச்சு வாய்ப்பனைத்தும் எவ்விடத்தும் தமிழே வேண்டும்" என்று சமுதாயத்தில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்தி, அனைத்துத் துறைகளிலும் புரட்சிக் கருத்துக்களை விதைத்தவர் பாரதிதாசன் ஒருவரே ஆவார்.

"சாவிலும் தமிழ் படித்துச் சாதல்
வேண்டும்—என்
சாம்பலும் தமிழ் மணந்து வேதல்
வேண்டும்."

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!"
—வாழ்க தமிழ்.

★



# அண்ணா பிள்ளைத் தமிழ்

கவிஞர் தமிழ்ச்சுரபி

## 5. முத்தப் பருவம்

**1**

மெய்க்கை வாங்கி இரை தன்னைப்
  பெய்கை யாலே கோடிகயல்
பொய்க்கை நோக்கி இரை விழுங்கும்
  பொய்கை மலர்ந்த மரைபோன்று
கொய்யக் கனியைக் கவிதிரியும்
  கோவை யாக்க கவிதிரியும்
கோவைத் துலவும் காவினிலே
  கோவை வேலி கனிபோன்று
தொய்யில் கழுவ முகங்கழுவ
  தோய்ந்து பாய்ந்து தெருவோட
தொடருங் காஞ்சி நதிபோன்று
  தொடுத்துச் சிவந்து தீபமணம்
மொய்க்கும் பவளச் செங்கனிவாய்
  முத்தந் தருக முத்தமே!
முப்பா லூட்டுந் தாய்க்கச்சி
  முத்தே! தருக முத்தமே!

**2**

அறுவைச் சிகிச்சை செய்தங்கே
  அடர்ந்த அழுக்கை அகழ்ந்தென்றும்
அருளைப் பெய்து சீர்படுத்தி
  அறிவு என்னுங் கண்கொடுத்துச்
சிறுமை கண்ட போழ்தத்தும்
  சிங்க நெஞ்ச னழகிரிக்கு
சிறப்புச் செய்து கூட்டத்தில்
  சேர்த்த முடிப்பு கைகொடுத்துக்
குறுங்கை வீசுங் குழந்தைக்குங்
  குறுங்கோற் பிடித்த கிழவர்க்குங்
குறிக்கோட் கொண்ட தம்பிக்குங்
  குறுகா குலையா நெஞ்சளித்தோய்
முறுவற் காட்டி கனிவாயால்
  முத்தந் தருக முத்தமே
முப்பா லூட்டுந் தாய்க்கச்சி
  முத்தே! தருக முத்தமே

**3**

**(வேறு)**

சிற்றிடையுஞ் சிறுநடையும் நொந்து
      தளர்ந்தந்தச்
  சேலம்மா நாட்டி லென்றுஞ்
சிறுமைகுணங் கொண்டவரின்
      எதிர்ப்பிடையே வீரமாக
  திராவிடர் கழகந் தன்னைப்
பெற்றெடுத்துத் தாயாகி பெருமைசே
      ரொளிவிளக்காம்
  பெரியாரைத் தந்தை யாக்கிப்
பேரன்பு பாலூட்டி அறமூட்டி பொறுமை
  பிரியமுடன் வளர்த்த நேரம்  [யூட்டி
சிற்றின்ப ஆசையாலோ சொத்துரிமை
      வாரிசுக்கோ
  சிறுமணி யம்மை தன்னைச்
சிறியாரும் விரும்பாத செங்கைதனைப்
      பெரியாரும்
  திருமணத்தைச் செய்த தாலே
தற்செயலாய்ப் பிரிந்தாலும் மதிப்பென்றுந்
      தருமண்ணு
  தண்வாயின் முத்தமருளே
தமிழ்க்கடற் கடைந்தவன் அமிழ்தெடுத்
      தளித்தவன்
  தண்வாயின் முத்தமருளே

**4**

பெரியாரின் திருமணத்தை விரும்பாத
  பிரியமுடன் நாடி கூட  [தோழர்கள்
பேரறிவு கொண்டவன் புதுவழியைக்
  பிரிந்தவரின் நடுவில் நல்ல  [கண்டவன்
அறிக்கையினைப் படித்துக் காட்ட
      அவரொப்ப
  அன்பொழுக அவரை நோக்கி
அருமைமிகு திராவிட முன்னேற்றக்
      கழகமின்றே
  அரும்பிநடை போடும் மற்றும்
பெரியாரே இக்கழகத் தந்தையாவா
      ரெனக்கூறிப்
  பெருமைக்குப் பெருமை சேர்த்துப்
பெருந்தன்மைக் கணிகலன் பூட்டியே
      பார்த்துப்
  பீடுநடை போட்டுக் கொள்கை
சரியென்று மாற்றாரும் போற்றிட
      வருமண்ணு
  தண்வாயின் முத்தமருளே
தமிழ்க்கடற் கடைந்தவன் அமிழ்தெடுத்
      தளித்தவன்
  தண்வாயின் முத்தமருளே

# குடும்ப விளக்கு என்றும் எரிய குடும்ப நலத் திட்டம் உதவும்!

"சாவதற்கோ பிள்ளை தவிப்பதற்கோ பிள்ளை
காதலுக்கு வழி வைத்து கருப்பாதைச் சாத்தக்
காதவொன்று கண்டறிவோம்!"

— பாரதிதாசன்.

அளவின்றிக் குழந்தைகளைப் பெற்றவர்கள்
அளவில்லாத் துன்பம் அடைவதைக் கண்ட
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்
குடும்ப நலத்திட்டத்தை வலியுறுத்த
"குடும்ப விளக்கு" என்னும் நூலில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

எனவே,

உங்கள் "குடும்ப விளக்கு" என்றும் அணையாதிருக்க
ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்ட பிறகு
அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம்:

கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளலாம்!

அல்லது வழக்கில் இருந்துவரும் கருத்தடைச்
சாதனங்களைப் பயன்படுத்தலாம்!

இது பற்றி மேலும் மேலும் விவரம் அறிய உங்கள் அருகாமையில் உள்ள

## குடும்ப நலத்திட்ட நிலையத்தை அணுகுங்கள்.

-குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3.
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.